

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
## போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

---

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 19ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் நாள் வியாழக்கிழமை**

**அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம் - குறள் எண் : 59**

### குறள்

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

### குறள் விளக்கம்

புகழுக்குரிய இல்வாழ்க்கை அமையாதவர்கள், தம்மைப் பழித்துப் பேசுவோர் முன்பு தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் குன்றிப் போய் விடுவார்கள்.

### பழமொழி ( Proverb )

***A sound mind in a sound body***

உடல் வலுவுற்றால் உள்ளமும் வலுவுறும்.

### பொன்மொழி

நாம் எவ்வளவு அளித்தோம் என்பதிலல்ல. அதை எப்படி அளித்தோம் என்பதில் தான் பெருந்தன்மை அடங்கியுள்ளது.

### இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

### இன்றைய பொது அறிவு வினா விடை

1. எய்ட்ஸ் நோய்க்கான HIV வைரஸை முதன்முதலில் கண்டு பிடித்தவர்?

   லுக் மான்டேக்னியர்

2. முதல் இரும்பு கப்பலை உருவாக்கியவர்? வில்கின்சன்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

Don’t worry about it. அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

Your marks will get better if you practice more.

நீங்கள் அதிகமாக பயிற்சி செய்தால் உங்கள் மதிப்பெண்கள் நன்றாக இருக்கும்.

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்



## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- ஜியார்ஜியா அன்னையர் தினம்
- எகிப்து விளையாட்டு வீரர்கள் தினம்
- இந்தோ-பாகிஸ்தான் போர் ஆரம்பமானது(1971)
- போஸ்னியா என்ற நாடு உருவாக்கப்பட்டது(1992)
- சவுதி அரேபியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது(1938)

### இன்றைய செய்திகள்

- 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு அட்டவணையினை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று வெளியிட்டார். மே 5 ஆம் தேதி துவங்கி மே 23 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 6 முதல் 9 வகுப்புகள் வரை மே 2 முதல் தொடங்கி மே 13 வரை நடைபெறுகிறது.
- இக்கல்வியாண்டு மே 13 ஆம் தேதி நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- நகர்புறத் தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் நேற்று பதவி பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.
- ரஷ்யாவின் 80 சதவீத படைகள் உக்ரைனுக்குள் நுழைந்துள்ளன. போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
- உக்ரைனுக்கு இந்தியா சார்பில், போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் விமானம் மூலம் ஒன்றிய அரசு அனுப்பி வைத்துள்ளது.
- தமிழகத்தில் நான்கு நாளைக்கு கனமழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் அறிவிப்பு.